**தலாவ பிரதேச சபை**
**அநுராதபுரம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 24 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 செப்டம்பர் 10 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்டம்பர் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 பாதகமான அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தலாவ பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் வீதவரி மற்றும் வரிகளின் பட்டியலிடல் ரூபா 6,248,352 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுகளில் ரூபா 6,074,761 தொகையாக காண்பிக்கப்பட்டு இருந்ததனால் ரூபா 173,591 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ii) | மீளாய்வாண்டின் புதிய நீர் இணைப்பு வருமான பட்டியலிடல் ரூபா 608,063 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுககளில் ரூபா 749,812 தொகையாக காண்பிக்கப்பட்டு இருந்ததனால் ரூபா 141,749 தொகை கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (iii) | மீளாய்வாண்டின் விளம்பரப் பதாதைகள் வருமான பட்டியலிடல் ரூபா 4,335,441 பெறுமதியான ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுகளில் ரூபா 4,535,441 தொகையாக காண்பிக்கப்பட்டு இருந்ததனால் | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 200,000 தொகை அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (iv) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 14,913,461 பெறுமதியான தொகை, நிதிக் கூற்றுகளில் ரூபா 16,539,796 தொகையாக காண்பிக்கப்பட்டு இருந்ததனால் ரூபா 1,626,335 தொகை அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (v) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு செலுத்த வேண்டிய ஓய்வூதியத் தொகை மற்றும் ஊக்குவிப்புத் தொகையின் பெறுமதி ரூபா 1,970,971 தொகை கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (vi) | பெகோலோடரை வாடகைக்குக் கொடுத்ததன் மூலம் இதுவரையில் அறவிடப்பட வேண்டிய ரூபா 105,900 பெறுமதியான தொகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (vii) | 2018 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த 65 பற்றுச்சீட்டுக்களுக்கு உரிய ரூபா 371,946 பெறுமதியான தொகையை சபை நிதிக்கு செலுத்தாத காரணத்தால் இடம்பெற்றிருந்த நிதி முறைகேடுகள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடமிருந்து கிடைக்கப் பெற வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (viii) | மா நகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 73,000,000 தொகை செலவில் நிர்மாணிக்கப்பட்ட 2019 யூன் 27 ஆம் திகதி சபையிடம் ஒப்படைக்கப்பட்ட தம்புத்தேகம பல்நோக்குக் கட்டிடம் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (ix) | மீளாய்வாண்டில் நடைபெற்றிருந்த செயற்திட்டங்கள் 05 இற்குரிய ரூபா 3,758,195 பெறுமதியான செலவுகள் இனங்காணப்பட்டு மூலதனக் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (x) | மீளாய்வாண்டில் நிர்மாணிக்கப்பட்ட 02 கட்டிடங்களின் பெறுமதி ரூபா 2,818,000 தொகை நிதிக்கூற்றுகளில் ரூபா 2,246,205 தொகையாகக் காண்பிக்கப்பட்டிருந்ததால் நிலையான சொத்துகள் ரூபா 571,795 தொகை குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |

| | | | |
|---|---|---|---|
| (xi) | மத்திய சுற்றாடல் அதிகார சபையுடன் கரகஹவெவ கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக செய்யப்பட்ட ஒப்பந்தத்துக்கு இணங்க சபை செயற்பட்டிருக்காத காரணத்தால் செலுத்த வேண்டியிருந்த ரூபா 2,984,588 பெறுமதியான தொகை செலுத்தப்பட வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (xii) | ஒருகலயாய கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தின் நிர்மாணப் பெறுமதியைக் கண்டறிந்து நிதிக்கூற்றுகளில் காண்பித்திருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (xiii) | மீளாய்வாண்டுக்குள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த செயற்திட்டங்கள் 36 இற்காக உள்ளூராட்சித் திணைக்களத்திடம் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 2,771,381 பெறுமதியான தொகை நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (xiv) | கம்பெரலிய செயற்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட செயற்திட்டங்கள் 12 இற்காக ஒப்பந்ததாரருக்கு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 1,895,163 பெறுமதியான தொகை நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (xv) | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட மூலதன செயற்திட்டங்களுக்கான மொத்தச் செலவு ரூபா 31,271,403 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுகளில் ரூபா 25,943,822 ஆகக் காண்பிக்கப் பட்டிருந்ததால் மூலதனச் செலவு ரூபா 5,327,581 தொகையாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (xvi) | 2018 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதத்துக்கு உரிய ஊதிய மீளச் செலுத்துகை மூலம் கிடைக்கப் பெற்ற ரூபா 2,796,937 பெறுமதியான தொகை ஆண்டின் மூலதனத் தொகையாக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |
| (xvii) | 2019 ஆம் ஆண்டு நடைபெற்றிருந்த வாகன விபத்தொன்று தொடர்பில் கிடைக்கப் பெற்ற ரூபா 603,573 பெறுமதியான காப்புறுதி இழப்பீடு பிடியாணை மற்றும் அபராத வருமானமாக குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும் | ஏற்றுக்கொள்கின்றேன் |

**(ஆ) இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 6 கணக்குகளுக்கு உரிய நிதிக்கூற்றுகளுக்கு ஏற்ப ரூபா 2,107,069 பெறுமதியான தொகை மற்றும் ஆவணங்களுக்கு ஏற்ப ரூபா 2,142,890 பெறுமதியான தொகை ஆக இருந்ததால் ரூபா 368,905 மொத்த வேறுபாடாகக் காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாடு ஒப்பிடப்பட்டு சிரயாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டில் இருந்து வருமானத்துக்கு ஏற்ப தனித் தனியாக ஆவணங்களைப் பேணி வர நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு நிலையான சொத்துக்களின் பெறுமதி மற்றும் மூலதனப் பெறுமதிக்கும் வருமானப் பங்களிப்பு கணக்கின் பெறுமதிக்கும் இடையே ரூபா 127,832 வேறுபாடு காணப்பட்டது. | மீதிகளின் வேறுபாடு ஒப்பிடப்பட்டு சிரயாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும் | 2020 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது மீதிகளை சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் |

**(இ) கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | கடந்த பல வருடங்களாக நிதிக்கூற்றுகளில் தொடர்ச்சியாக முன் கொண்டு வரப்பட்டுக் கொண்டிருக்கும் ரூபா 1,490,783 பெறுமதியான தொகைக்குரிய கிடைக்க வேண்டிய கணக்குகள் 03 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பெறவேண்டிய கணக்கு மீதிகளை தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ii) | கடந்த பல வருடங்களாக நிதிக்கூற்றுகளில் தொடர்ச்சியாக முன் கொண்டு வரப்பட்டுக் கொண்டிருக்கும் ரூபா 630,744 பெறுமதியான தொகைக்குரிய செலுத்த வேண்டிய கணக்குகள் 02 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளை தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் | 2020 ஆம் ஆண்டுக்கு முன்பு இந்தத் தொகையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**(ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பெறுமதி ரூபா 367,504,800 தொகையைக் கொண்ட கணக்குகள் 08 இற்கு உரிய ஏற்றுக் கொள்ளத்தக்க அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | நிதிக்கூற்றுகளில் காண்பிக்கப்படும் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தக் கூடிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ii) | பகுதியாக நிர்மாணிக்கப்பட்டிருந்த கரகஹவெவ கழிவுத் தொகுதியின் ஊழியர் ஓய்வறை மற்றும் அலுவலகக் கட்டிடம் தொடர்பான ஆவணக் கோப்புகள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய அத்தாட்சிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் இருந்து சரி செய்து நிதிக்கூற்றைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (iii) | நிதிக்கூற்றுக்கு ஏற்ப பெறுமதி ரூபா 9,500,000 தொகைக்கு உரிய தம்புத்தேகம புதிய வாரச் சந்தையை நிர்மாணிக்கும் செயற்திட்டத்துக்கான ஆவணக் கோப்புகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. | ஆவணக் கோப்புகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்துக்கு உரிய விலைமனுக் கோரல் நடவடிக்கைகள் மற்றும் பணம் செலுத்துகைகள் உள்ளூராட்சித் திணைக்களத்தால் செய்யப்பட்டிருந்தன. |
| (iv) | பொது வைப்புக் கணக்கில் காணப்படும் ரூபா 26,685,502 பெறுமதியான தொகை மீளாய்வாண்டில் வருமானமாக எடுக்கப்பட்டிருந்ததோடு அது தொடர்பான விரிவான தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | உரிய தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். | தலைவரால் நியமிக்கப்பட்டுள்ள குழு மூலமாகத் தரப்பட்ட பரிந்துரைகள் மற்றும் மா நகர சபையிடமிருந்து கிடைத்த ஒப்புதலின் பிரகாரம் இந்தப் பெறுமதி கணக்கேடுகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளது. |
| (v) | 2017 ஆம் ஆண்டில் மாகாண சபை செயற்திட்டங்களுக்கு உரிய சபை அங்கத்தவர்கள் 03 பேரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த ரூபா 1,308,999 தொகை பெறுமதியான 15817 பொருள் உருப்படி தகுதியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதை நிரூபிக்கத் தேவையான அத்தாட்சிகள் கணக்காய்வின் போது சமர்ப்பிக்கப்படவில்லை. | . | சபை அங்கத்தவர்கள் 03 பேரால் எடுத்துச் செல்லப்பட்டிருந்த ரூபா 1,308,999 தொகை பெறுமதியான 15817 பொருட்கள் தகுதியானவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டதை நிரூபிக்கத் தேவையான ஆவணங்களை |

உள்ளடக்கிய ஆவணக் கோப்புகளைத் தேடிக் கண்டறிய இயலாமல் போனதால் உரிய சான்றுகளை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க இயலாதுள்ளது.

1.4 **இணங்காமைகள்**

--------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை.**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1951 இலக்கம் 14 உடைய மோட்டார் வாகனச் சட்டம் 203 ஆணையம் | - | சபைக்கு உரிய TAFE ரக ட்ரக்டர் வண்டியைப் பதிவு செய்திருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| | நி.பி. 571 | 207,029 | சபைக்குரிய 02 ஆண்டுகள் கடந்த 16 வைப்புகள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |
| (இ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமாணி அறிவித்தல் | | | | |
| | (i) 2008 பெப்ரவரி 01 ஆம் திகதிய 1534/18 ஆம் இலக்க அதி விசேட | 288,000 | i 2019 ஆம் ஆண்டில் அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்டிராத 72 கைத் தொழில்களை இனங்கண்டிருந்த போதிலும் சபை | கணிப்பீட்டினை மேற்கொண்டு அனுமதிப்பத்திரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | வர்த்தமாணி அறிவித்தல் (இ) உப பிரிவு | | | இழந்திருந்த வருமானம் ரூபா 288,000 தொகையைத் தாண்டியிருந்தது. | வேண்டும் | |
| (ii) | வட மத்திய மாகாண ஆளுனரின் 2018 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 2086/15 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் 5 ஆம் பந்தி | 53,000 | ii | 2018 ஜுலை 01 ஆம் திகதியிலிருந்து சபை அங்கத்தவர்கள் வரும் ஒரு கூட்டத்துக்கு ரூபா 500 என்று படிகள் வழங்கப்பட வேண்டும் எனினும் சபையினால் 2018 ஏப்ரல் மாதத்தில் இருந்து படிகள் வழங்கப்பட்டிருந்ததால் சபை அங்கத்தவர்கள் 37 பேருக்கு மேலதிகமாக வழங்கப்பட்டிருந்த படிகளின் கூட்டுத் தொகை ரூபா 53,000 ஆகக் காணப்பட்டது. | அங்கீகாரமின்றி கொடுப்பனவு செய்தவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் வழிகாட்டல் கையேட்டின் 2.9.1 ஆம் பந்தி | 174,200 | i. | ஒரு பெறுகைக் குழுவில் எடுக்கப்படும் தீர்மானங்களின் அளவு படிகள் வழங்குவதற்காக ஒரு குழு எனக் கருதப்பட வேண்டும் எனினும் 2018 திசெம்பர் 20 மற்றும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதி களில் 02 குழுக்கள் மூலமாக செய்யப்பட்ட பெறுகை தீர்மானத்தின் எண்ணிக்கையின் அடிப்படையில் படிகள் வழங்கியதால் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் ரூபா 174,200 தொகை மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் படிகள் கொடுப்பனவிற்கு ம் மிகை கொடுப்பனவை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒரு பெறுகை குழுவின் தீர்மானத்தின் அளவு வெவ்வேறாக கலந்து ரையாடப்பட்டு கேள்விதாரதாரர் பற்றிய தீர்மானங்களுக்கு வந்ததன் பிறகு ஒவ்வொரு தீர்மானங்களுக்காகவு ம் குழு அறிக்கை எழுதப்படுவதால் அந்த தீர்மானத்தின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு பெறுகை படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. |
| | | 910,832 | ii. | கட்டிட விண்ணப்பங்களைப் பரிந்துரைத்தல், வீதிக் கோடு சான்றிதழ்கள் மற்றும் கையளிக்கப்படாத் சான்றிதழைப் பரிந்துரைத்தல், இணக்க சான்றிதழ்களை வழங்குதல் | சுற்றறிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய பரிசோதனைக் கட்டணங்களை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆகியவற்றுக்காக வெளிக்கள சோதனைகளுக்காக அறவிடப்பட வேண்டிய பரிசோதனைக் கட்டணம் சபைத் தீர்மானம் இல்லாமல் அறவிடப்பட்டிருந்தது. | | |
| (உ) | பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் 2009 ஏப்ரல் 16 ஆம் திகதிய 09/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை - | அன்றாட வருகை மற்றும் வெளியேறுதல் ஆகியவற்றைக் குறிப்பிடும் போது மீளாய்வாண்டில் 24 ஊழியர்களால் கைவிரலயாடையாள இயந்திரம் பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஊ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரிய வாகனங்கள் 10 இற்கு எரிபொருள் சோதனை நடத்தப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் ஷ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 22,570,537 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,224,306 ஆக இருந்தது.

### 2.2 நிதி கட்டுப்பாடு

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| கரகஹவெவ கழிவுத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 3,446,848 பெறுமதியான தொகையில் ரூபா 1,121,026 தொகை செயற்திட்டத்துக்காக செலவழிக்கப்பட்டு எஞ்சிய தொகை ரூபா 2,325,822 சபை நடவடிக்கைகளுக்காக | வெளியேயிருந்து கிடைக்கப் பெறும் பணத் தொகையை நோக்கங்களுக்கு மாத்திரமே உபயோகிக்க வேண்டும். | செயற்திட்டத்தை நிர்மாணிப்பதற்காக மத்திய சுகாதார அதிகார சபையினால் வழங்கப்பட்ட ரூபா 3,446,848 பெறுமதியான பணத் தொகையில் ரூபா 2,609,601 தொகையை நிர்மாண வேலைகளுக்காக செலவிட்டுள்ள போதிலும் |

| | | |
|---|---|---|
| செலவழிக்கப்பட்டிருந்தது. | | முழுமையான விபரங்கள் அடங்கிய எழுத்து மூல சான்றுகள் காணப்படவில்லை. |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 14,388,929 | 14,136,456 | 13,640,296 | 16,011,924 | 13,186,113 | 13,697,894 | 14,871,741 | 15,515,764 |
| (ii) | வாடகை | 18,306,305 | 12,275,059 | 12,174,008 | 853,619 | 22,669,866 | 12,322,425 | 12,636,255 | 752,568 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள | 4,963,000 | 5,460,218 | 5,460,218 | - | 2,678,000 | 4,149,953 | 4,149,953 | - |
| (iv) | பிடியாணைக் கட்டணம் மற்றும் நீதிமன்ற தண்டப் பணம் | 6,967,000 | 14,324,423 | 10,396,339 | 16,539,796 | 6,930,000 | 12,319,650 | 9,500,000 | 12,611,712 |
| | மொத்தம் | 44,625,234 | 46,196,156 | 41,670,861 | 33,405,339 | 45,463,979 | 42,489,922 | 41,157,949 | 28,880,044 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் 04 நீர் வினியோகத் திட்டங்களிற்கு உரிய நிலுவை நீர்க் கட்டண வருமானம் ரூபா 1,431,280 தொகையாகக் காணப்பட்டதோடு அது ஆண்டின் பட்டியலிடப்பட்ட வருமானத்தின் 64% ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.3.3 வீதவரி மற்றும் வரி

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 3408 வீத வரி அலகுகளில் 2009 ஆம் ஆண்டிற்குரிய மதிப்பீட்டின் அடிப்படையாகக் கொண்டு வரிகள் அறவிடப்பட்டிருந்தன. | புதிய வீத வரி மதிப்பீட்டின் பேரில் வீத வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | புதிய வீத வரி மதிப்பீடொன்றை நடத்துவதற்கு உள்ளூராட்சித் திணைக்களத்தின் உதவி ஆணையாளரின் அறிவுறுத்தல்கள் பிரகாரம் தற்போது தகவல்கள் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருப்பதை அறியத் தருகிறேன். |
| (ஆ) | 2009 ஆம் ஆண்டின் பிறகு வீத வரிகள் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் புதிய நிர்மாணங்கள் மற்றும் மாற்றங்கள் தொடர்பாக தற்காலிக மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் அந்த இடங்களில் வீதவரிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய வீத வரி மேற்கொண்டு வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | தற்காலிக மதிப்பீட்டைப் பெற்றுக் கொண்டுள்ளதால் பொதுச் சபையின் தீர்மானத்தோடு உள்ளூராட்சித் திணைக்களத்தினால் உரிய அமைச்சரின் அங்ககாரத்திற்கு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கிறேன். |

### 2.3.4 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 18 கடைகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடை வாடகை ரூபா 267,120 ஆக காணப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | அறவிடப்பட வேண்டிய தொகை சம்பந்தமாக எதிர்காலத்தில் சபையிடம் முன் வைத்து அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டில் விற்பனை உரிமையை குத்தகைக்கு விட்டிருந்த 15 சந்தர்ப்பங்களில் இருந்து கிடைக்க வேண்டியிருந்த நிலுவைத் தொகை ரூபா 359,964 ஆக காணப்பட்டது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2018 ஆம் ஆண்டுக்கு முன்பு குத்தகைக்கு விட்ட விற்பனைப் பண்டமொன்று உள்ளது. அதற்கு உரிய சட்டரீதியான ஆவணம் இல்லாததால் உறுதிப்படுத்த வழியில்லை. |

2.3.5 **அனுமதிப் பத்திர கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் விளம்பரப் பதாதைகள் 84 இடமிருந்து மற்றும் தம்புத்தேகம காரியாலயத்தின் எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் விளம்பரப் பதாதைகள் 97 இடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தக் கட்டணம் ரூபா 1,491,175 ஆக காணப்பட்டது. | உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |

2.3.6 **நீதி மன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 14,913,461 ஆகவும், முத்திரைக் கட்டணம் 17,231,141 ஆகவும் காணப்பட்டது. | உரிய உத்தியோகத்தர் களிடமிருந்து கட்டணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைச் சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டும் எனினும் 2019 திசெம்பர் 31 ஆம் திகதியில் உரிய விடயங்கள் தொடர்பாக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய விடயங்கள் தொடர்பாக உப விதிகளை விதிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதேச சபை சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களுக்குரிய உப விதிகளை எதிர்காலத்தில் தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். |

**(ஆ) எதிர்பார்த்த விளைவுகளை (output) பெற்றுக் கொள்ளாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த பல்வேறு பணிகள் 03 இனை நிறைவேற்றுவதற்காக ரூபா 1,121,027 பெறுமதியான தொகையைச் செலவழித்திருந்த போதிலும், எதிர்பார்த்த பெறுபேற்றினை (output) அடைந்திருக்க வில்லை. | செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது ஒரு சாத்தியவள ஆய்வொன்றைச் செய்து அந்த செயற்திட்டத்தை பயனுள்ள விதத்தில் செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உபயோகத்துக்கு எடுக்கக் கூடிய விதத்தில் தயாரிப்பதற்கு போதியளவு பணம் இல்லாத காரணத்தால் செயற்திட்டம் பூரணப்படுத்தப்படவில்லை. |

**(இ) பணிகளை நிறைவேற்றுவதில் தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| i. | விஷேட உள்ளூராட்சி செயற்திட்டத்தின் கீழ் தம்புத்தேகம மத்திய மகா வித்தியாலயத்துக்கு நீர் இணைப்பைப் வழங்குவதற்கு ரூபா 3,500,000 தொகை நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அவ்வாண்டிலேயே நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உள்ளூராட்சித் திணைக்களத்தினால் விலைமனுக் கோரல் நடவடிக்கைகள் செய்யப்பட வேண்டும். அதற்கான காலம் போதாமையால் அதைப் பூர்த்தி செய்ய இயலாமல் போயுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் திகதி வரையும் உரிய செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| ii. | விசேட தேவையுள்ள கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பலுகஸ்வெவ திரு.பியதாஸ அவர்களின் வீட்டுக்கு முன்னாலுள்ள பாதை மற்றும் நல்லமுதாவ கிராமத்தின் குறுக்குத் தெருவில் கருங்கற்களைப் பரப்பி செப்பனிட ரூபா 500,000 என ரூபா 1,000,000 தொகை நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், உரிய செயற்திட்டத்தை மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் நிறைவேற்றியிருக்கவில்லை. | அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்கள் அவ்வாண்டிலேயே நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்திற்காக 2019 திசெம்பர் 10 ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதோடு உரிய காலத்துக்குள் செயற்திட்ட வேலைகள் பூர்த்தி செய்யப்படாததால் செயற்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் சபை அறிந்து வைத்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை செயற்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை முன்னிட்டு தலாவ பிரதேசத்தில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண திறைசேரியால் நீதிமன்ற தண்டப் பணத்தைச் செலுத்தும் போதும் சபையினால் 2018 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்டிருந்த 02 செயற்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஆரம்பிக்கப் | முன் மொழியப்பட்டுள்ள செயற்திட்டங்களை உடனடியாக ஆரம்பித்து பொது மக்களுக்கு வழங்க தேவையான | சபை மண்டபக் கட்டிடத்தை நிர்மாணிக்க உரிய பெறுகை நடவடிக்கைகள் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் செய்யப்படுவதோடு அது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | பட்டிருக்காததோடு அவற்றுக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 7,420,864 பெறுமதியான தொகை இலக்கம் 315-1001-10000041 உடைய மக்கள் வங்கியின் நிர்மாண நடைப்புக் கணக்கில் செயலற்ற வகையில் வைக்கப்பட்டிருந்தது. | நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | |
| (ஆ) | ரூபா 7,590,000 பெறுமதி யான 02 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் விபத்துகளால் நேர்ந்திருந்த ரூபா 4,334,020 பெறுமதியான நிதி இழப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 103, 104 மற்றும் 105 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்துக்கு ஏற்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரிடம் இருந்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | i. PF -7345 கெப் வாகனத்தின் நட்டம் ரூபா 3,400,520 ஆகும். பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.<br>ii. LL - 6932 டிப்பர் வாகனத்தின் நஷ்டம் ரூபா 932,500 ஆகும். அதன் 80% தொகை காப்புறுதித் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. |

3.3 **ஒப்பந்த நிர்வாகம்**

----------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | ------------------------------- | ------------- | --------------------------------- |
| (அ) | தலாவ கரகஹவெவ கழிவுகள் மத்திய நிலையத்தை நிர்மாணிக்கும் உப செயற்திட்டங்கள் 03 இற்கு உரிய அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணங்கள் ரூபா 235,440 பெறுமதியான தொகை அறவிடப்படாமல் உரிய ஒப்பந்ததாரருக்கு பணம் செலுத்தப்பட்டிருந்தது. | ஒப்பந்தப் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய தாமதக் கட்டணத்தை அறவிடத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | தாமதக் கட்டணம் அறவிடப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. |
| (ஆ) | கழிவு முகாமைத்துவ மத்திய நிலையத்தினை நிர்மாணிக்கும் பணிகள் பூர்த்தி செய்யப்படாமையால் தினந்தோறும் ஒன்றுசேரும் கழிவுகளை தம்புத்தேகம ஒருகலயாய கழிவுகள் மத்திய நிலையத்துக்கு எடுத்துச் செல்வதற்கு மேலதிகத் தொகையை செலவழிக்க நேர்ந்துள்ளது. | செயற்திட்டத்தை உடனடியாகப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | தலாவ நகரத்தில் கழிவுகளைச் சேகரிப்பதற்காக ஒரு ட்ரக்டர் வண்டி பாவிக்கப்படுவதால் அது நிர்மாணிக்கப்பட்டால் போக்குவரத்துச் செலவு குறைந்து விடும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (இ) | கட்டியாவ முன் பள்ளி கட்டிடத்தை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் பழைய கட்டிடத்தைச் சுற்றி கொங்க்ரீட் தூண்களை நிர்மாணித்து பழைய கூரைக்கு மேலால் எஸ்பெஸ்டோஸ் கூரை அமைக்கப்பட்டிருந்த போதிலும் மிகவும் சிதிலமடைந்த நிலையில் காணப்படும் பழைய கூரையை அகற்றாமையால் முன் பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பாதுகாப்பற்றதாக காணப்பட்டது. | முன்பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் விதத்தில் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இதன் இரண்டாம் கட்டத்துக்காக உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து பணம் கிடைக்காமையால் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. |

3.4 **மனித வள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கடந்த 02 முதல் 05 ஆண்டு காலத்துக்குள் இடம் மாற்றம் பெற்றுச் சென்றிருந்த, பணியை விட்டு விலகிய மற்றும் பணி நிறுத்தத்துக்கு ஆளாகியிருந்த 32 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 980,845 தொகை ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை | அறவிட வேண்டிய ஊழியர் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன் |

3.6 **சொத்துக்கள் முகாமைத்துவம்**

----------------------------------

3.6.1 **சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்யாதிருந்தமை**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து ரூபா 206,049,855 தொகை பெறுமதியான நடமாடாத சொத்துக்கள், சபையினால் நியமிக்கப்பட்டிருந்த குழுவொன்றினால் ரூபா 286,567,906 பெறுமதிக்கு கணிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருந்தது. இதற்கிணங்க, காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி 335 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததோடு 03 வகையான சொத்துக்களின் பெறுமதி 23 சதவீதத்திலிருந்து 94 சதவீதம் வரை குறைந்திருந்தது. | தகைமை வாய்ந்த விசேடத்துவ குழுவொன்று மூலம் மீள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றேன். |

**3.6.2 கையேற்கப்படாத சொத்துக்கள்**

------------------------------------------

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| சபையினால் பயன்படுத்தப்படும் 12 வாகனங்களின் உரிமையைக் கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதோடு 21 வாகனங்களிற்கான ஆண்டு வருமான அனுமதிப் பத்திரங்களும், 04 வாகனங்களிற்கான காப்புறுதி மேவுகையும் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையைக் கையேற்று வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதிப் மேவுகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் வருமான அனுமதிப் பத்திரங்கள் மற்றும் காப்புறுதிப் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். வாகனங்கள் 04 இனை பதிவு செய்திருக்காததால் காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 3.6.3 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 17,615,000 பெறுமதியான 08 மோட்டார் வாகனங்கள் செயலற்றுக் காணப்பட்டன. | செயலற்றுக் காணப்படும் வாகனங்களை சபையின் உபயோகத்துக்காக பயன்படுத்த வேண்டும். | பழுது பார்த்தல் இலாபமாகவுள்ள வாகனங்களைப் பழுது பார்க்கவும் ஏனைய வாகனங்களை அகற்றவும் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | மா நகர சபை மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் நிர்மாணிக்கப்பட்டு 2019 ஜூன் 27 ஆம் திகதி சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 73,000,000 பெறுமதியான இரண்டு மாடி கட்டிடத்தின் முதல் மாடியிலிருந்த 08 கடைகளையும் குத்தகைக்கு விட்டிருக்கவில்லை. | உரிய கடைகளை பயனுள்ள விடயங்களுக்குப் பயன்படுத்த அல்லது வருமானம் ஈட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேல் மாடியை தற்போது உப அலுவலகமாக பயன்படுத்துகிறேன். ஏனைய கடைகளைக் குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2017 ஆம் ஆண்டில் ரூபா 9,500,000 தொகை செலவழித்து நிர்மாணிக்கப்பட்ட தம்புத்தேகம வாரச் சந்தைக் கட்டிடத் தொகுதியை உபயோகப்படுத்தாமல் காடு மண்டிக் காணப்பட இடமளிக்கப்பட்டிருந்தது. | வாரச் சந்தை கட்டிடத்தைப் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வாரச் சந்தையை அந்த இடத்துக்குக் கொண்டு செல்ல என்னால் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் மா நகர சபை வாரச் சந்தையை முன்பிருந்த அதே இடத்தில் வைத்திருக்க தீர்மானித்துள்ளது. |
| (ஈ) | சபையினால் ரூபா 5,421,890 தொகை செலவில் எப்பாவல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தகன நிலையத்தை அதற்குத் தேவையான அடுப்புகளைப் பொருத்தாததால் 02 ஆண்டுகள் கடந்தும் அது செயலற்றுக் காணப்பட்டது. | உரிய செயற்திட்டங்களை உபயோகப்படுத்தக் கூடிய விதத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | 2020 ஆம் ஆண்டில் செயற்திட்ட அபிவிருத்தி அமைச்சிடம் அடுப்புகளைப் பெற்று தகன நிலையத்தின் பணிகளைப் பூர்த்தி செய்கிறேன். |
| (உ) | ரூபா 8,000,000 தொகை பெறுமதியான கேட்கோர்கூடம் எவ்விதத்திலும் பயன்படுத்தப்படாத காரணத்தால் அழுக்கடைந்து சுற்றி வர | செயலற்றுக் காணப்படும் சொத்துகளை உபயோகப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட | போதியளவு ஊழியர்கள் இல்லாத காரணத்தால் கேட்போர்கூடத்தை ஒப்படைக்கும் போது சுத்திகரிக்கப்படும். அத்தோடு |

| | | | |
|---|---|---|---|
| | புதர்கள் வளர்ந்து காணப்பட்டது. | வேண்டும். | மின்சார தொகுதிகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருப்பதை ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஊ) | தலாவ நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் 20 கடைகளைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடத்தை கிட்டத்தட்ட 03 ஆண்டுகளாக மூடி வைத்திருப்பதால் அந்தக் காணி புதர்கள் வளர்ந்து கடைகள் அழுக்கடைந்து காணப்பட்டது. | பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் இனங்காணப்பட்டு நஷ்டத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | முதல் மாடியில் ஒரு கடையை குத்தகைக்கு விட்டு எஞ்சிய 19 கடைகளையும் சபையின் தீர்மானத்துக்கேற்ப கடைகளை வாங்க எவரும் முன்வரவில்லை. |

3.7 **இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புரநெகும 20 கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான பெறுகை நடவடிக்கைக்காக 2017 ஆம் ஆண்டில் ரூபா 73,255 தொகை செலவில் பத்திரிகை விளம்பரத்தைப் பிரசுரித்து பின்னர் அதை இரத்து செய்ததால் ரூபா 73,255 நிதி இழப்பு ஏற்பட்டிருந்தது. | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஏற்றுக் கொள்கிறேன். |
| (ஆ) | டிபர் வண்டியொன்றின் பிரேக் அமைப்பு பழுதடைந்துள்ளதாக சாரதியால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும், அதைச் செலுத்தியதால் 2019 ஜனவரி 31 ஆம் திகதி விபத்துக்குள்ளானதோடு ரூபா 933,500 பெறுமதியான நஷ்டம் ஏற்பட்டிருந்தது. | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இவ்வாறான நிலைமைகள் வருங்காலத்தில் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். |
| (இ) | ரூபா 6,390,000 பெறுமதியான கெப் ரக வாகனமொன்று 2019 ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதியில் விபத்துக்குள்ளாகி ரூபா 3,400,000 பெறுமதி மதிப்பிடப்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருந்தது. இந்த விபத்து தொடர்பாக தகவல் பிழைகள் மற்றும் துஷ்பிரயோகங்களை அடிப்படையாகக் கொண்டு காப்புறுதி இழப்பீட்டுத் தொகை மறுக்கப்பட்டுள்ளதால் வாகனத்தைப் | பொறுப்பான தரப்பினர் இனங்காணப்பட்டு நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பரிசோதனைகளை உள்ளூராட்சித் திணைக்களத்தால் பூரணப்படுத்தி பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினரை உறுதிப்படுத்திக் கொண்டு பின்னர் மிகை கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

பழுது பார்க்காமல் வாகனத்தின் உள்நாட்டு முகவரின் பிரதேச பழுதுபார்த்தல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

3.8 **வெளிப்படையான மோசடிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2020 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி பண பரிசோதனையின் போது கையிருப்புத் தொகையில் ரூபா 152,961 பெறுமதியான தொகை குறைவாக இருப்பது கண்டறியப்பட்டது. | குறைபாடுகள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பணம் பெறுபவரின் கையொப்பத்தைப் பெற்றுக் கொள்ளாத காரணத்தால் பணத் தொகை குறைவாகத் தோன்றிய போதிலும் உண்மையில் அந்தப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. தற்போது காசாளர் அன்றாட கொடுக்கல் வாங்கல்களுக்கான ஆவணமொன்றைப் பேணி வருவதால் இக் குறைபாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

3.9 **பெறுகை**

**பொருட்கள் மற்றும் சேவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 5,760,735 மதிப்பிடப்பட்ட பெறுமதியான கொம்போஸ்ட் சேதன உரத் தொழுவத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டம் பெறுகை வழிகாட்டல் கையேடு 3.2 இற்கு இணங்க தேசிய மட்டத்தில் போட்டி கேள்வி கோராமல் 04 பாகங்களாகப் பிரிக்கப்பட்டு சமூக அடிப்படையிலான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | செயற்திட்டங்களை வழங்கும் போது பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிர்மாண வேலைத் திட்டம் போட்டி விலை கோரல் மூலமாக நடைபெறும் போது நீண்ட காலம் எடுப்பதால் மற்றும் இந்த நிர்மாணப் பணிகள் யானைகள் தாக்கும் பிரதேசத்தில் நடைபெறுவதால் கேள்விதாரர்கள் முன்வர மாட்டார்கள் என எண்ணி முழுத் தொகையையும் பாகங்களாகப் பிரித்து விவசாய இயக்கங்கள் ஊடாக உடனடி ஒப்பந்த வழிமுறையின் கீழ் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கையேட்டின் 3.9.1 இற்கு இணங்க தகைமைகள் | செயற்திட்டங்களை வழங்கும் போது பெறுகை | இந்த செயற்திட்டங்களை சமூக அடிப்படையிலான |

| | | |
|---|---|---|
| பரிசோதிக்கப்பட்டு கரகஹவெவ கழிவு மீள்சுழற்சி மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,488,490 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. | வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | இயக்கங்களுக்கு வழங்கும்போது பெறுகை வழிகாட்டல் கையேட்டிற்கு இணங்க சங்கங்களின் ஒப்பந்தத் திறமையை உறுதிப்படுத்தி சான்றிதழைப் பெற்று கரகஹவெவ கழிவு மீள்சுழற்சி மத்திய நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,488,490 பெறுமதியான தொகைக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வட மத்திய மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2015 ஆம் ஆண்டு மார்ச் 18 ஆம் திகதிய 04/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். | உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரை நியமித்து தேவையான அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டு எதிர்வரும் நடவடிக்கைகளை மேற் கொள்வதாக அறிய தருகின்றேன். |